தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 20, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 ஏப்ரல் 3, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்"

நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றுபவர் மக்களுக்குத் தலைவர் என்று தனியே கருதி மதிக்கப்படுவார்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திருமதி ஆர். சியாமளா அவர்கள் 2-4-2002 அன்று மறைவுற்றதாக வரப்பெற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திருமதி ஆர். சியாமளா அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் கோவில்பட்டி தொகுதியிலேயிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள். முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)